சீரணிப் படையில் பெண்கள்.

*69 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் சீரணிப் படையில் அங்கம் வகிக்கும் பெண்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 426 தாய்மார்கள் (நானூற்று இருபத்தியாறு) பெண் சீரணித் தொண்டர்கள் சீரணி உறுப்பினர்களாக அங்கம் வகிக்கிறார்கள்.

திரு. ந. தருமலிங்கம் : சட்டப் பேரவைத் துணைத்தலைவரவர்களே, இது வரையில் தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட்டத்தில் சீரணியில் பெண்கள் அங்கம் வகிக்கிறார்கள் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

தருமபுரி மாவட்டம்—38

தஞ்சை மாவட்டம்—ஒன்றுமில்லை.

சேலம் மாவட்டம்—ஒன்றுமில்லை.

தென்னாற்காடு மாவட்டம்—ஒன்றுமில்லை.

நீலகிரி மாவட்டம்—60.

கன்னியாகுமரி மாவட்டம்—100.

கோயம்புத்தூர் மாவட்டம்—21.

திருநெல்வேலி மாவட்டம்—3.

மதுரை மாவட்டம்—101.

செங்கல்பட்டு மாவட்டம்—ஒன்றுமில்லை.

இராமநாதபுரம் மாவட்டம்—ஒன்றுமில்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—6.

வடாற்காடு மாவட்டம்—37.

சென்னை—60.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சீரணிப்படையில் தலைவராக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். எந்த மாவட்டத்திலேயாவது பெண் ஒருவரை மாவட்டச் சீரணிப் படைத் தலைவ ராக அரசு நியமித்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, பெண்களை மாவட்டச் சீரணித் தலைவராக இதுவரை நியமிக்கவில்லை.

1972 டிசம்பர் 7]

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஒரு பெண் கூட சீரணிப் படையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது சொன்னார்கள். அங்கே சீரணியில் பெண்களைச் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அண்ணா அவர்கள் சீரணி அமைப்பை அமைத்தபோது பெண்கள் 30 வயதுக்கு மேலே இருப்பவர்கள்தான் இருக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் பெண் தொண்டர்கள் அதிகம் சேர்ப்பதற்கு இயலவில்லை.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, சீரணிப்படையில் சேருவதற்கு வயது வரம்பு என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன் பெண்களுக்கு—30 வயதுக்குமேல்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும் சீரணிப் படைத் தலைவர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்களா ? அப்படி நியமிக்கப்பட்டிருந்தால் மாவட்ட வாரியாக அவர்களின் பெயர்களை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : எல்லா மாவட்டங்களிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் நியமிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று உலகில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை தரவேண்டுமென்ற உணர்வு வளர்ந்து வரும் நேரத்தில், குறிப்பாக இந்தியாவையே ஒரு பெண் ஆண்டு வரும் நேரத்தில், பெண்கள் சீரணிப்படையில் குறைவாக இருப்பதற்குக் காரணம் , அரசாங்கத்தின் உற்சாகக் குறைவா அல்லது நாம் கொடுக்கும் ஊக்கக் குறைவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : வயதின் வரம்புதான் இதற்கு தடையாக இருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவரவர்களே, சீரணியில் சேர பெண்கள் பெரிய அளவுக்கு ஆசைப்படுகிறார்கள், விருப்பத்தோடு இருக்கிறார்கள். இருந்தாலும் போதுமான அளவுக்கு விளம்பரம் இல்லை. சரியான முறையில் விளம்பரம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினரின் யோசனையைத் தக்க சமயத்தில் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். கணபதி: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பழனியம்மாள் அவர்கள் சேரணிப்படையில் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

திரு. சொ. காவேரிமணியம்: தலைவரவர்களே, இம்மாதிரியான சேரணித் தலைவர்களுக்கு தனி அலுவலகம் எந்தெந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? அவர்களுக்கு வாகன வசதி ஏதேனும் அரசின் மூலம் அளிக்கப்பட்டிருக்கிறதா? வேறு என்னென்ன வசதிகள் அவர்களுக்குச் செய்து தரப்பட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாவட்ட சேரணித் தலைவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, சேரணிப் படையில் பெண்கள் சேர வயது வரம்பு தடையாக இருக்கிறது என்று சொன்னார்கள். முப்பது வயது என்று இருப்பதை 25 வயது என்று குறைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினரின் யோசனை பரிசீலனை செய்யப்படும்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, சேரணிப்படையில் அங்கம் வகிக்கும் பெண்கள் ஆற்றும் பணி என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பெண் தொண்டர்கள் சக்திக்கேற்றவாறு பணிபுரிகிறார்கள். சத்துணவு விநியோகித்தல், சாலைகளுக்கு மண் எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள்.

கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடிப்பு.

* 70 வினா.—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிக்கும் இடங்களை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய சர்வே (Survey) ஏதேனும் நடத்தப்படுகிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம், இராமேஸ்வரம், கடலூர், இராயபுரம், குமரிமுனை ஆகிய இடங்களில் ஆய்வு மற்றும் அண்மைக் கடல் மீன் பிடி நிலையங்கள் அமைக்கப்பட்டு, புதிய